**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா M.A.,LLM.,B.Sc.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,சிங்கம்புணரி

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ம் நாள் செவ்வாய்கிழமை

(2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பிரபாவ வருடம் ஆனி திங்கள் 16 ம் நாள்)

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.80/2020**

**CNR No:TNSV160000702020**

அரசுக்காக
காவல்ஆய்வாளர்,
எஸ்.எஸ்.கோட்டை காவல் நிலையம்,
குற்ற எண்:66/2016 -- குற்ற முறையீட்டாளர்

/ எதிர் /

1. அய்யப்பன் (வயது 28/2016)
த/பெ.செல்லையா,
விக்கிரமசிங்கபுரம்,
திருநெல்வேலி மாவட்டம்.

2. சுரேஷ் (வயது 22/2016)
தலவாய்புரம்,
வள்ளியூர் அஞ்சல்,
திருநெல்வேலி மாவட்டம்.

3. ராஜா (வயது 26/2016)
த/பெ.சுப்பிரமணி,
விக்கிரமசிங்கபுரம்,
திருநெல்வேலி மாவட்டம்.

4. கண்ணன், (வயது 30/2016)
த/பெ.ஜெயராஜ்,
கெ.பள்ளங்கிணறு
தூத்துக்குடி மாவட்டம். -- குற்றம்சாட்டப்பட்டவர்கள்

**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர்கள் காவல் அடைப்பிற்கு உட்படுத்திய காலம் | இல்லை |
| 2. | நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 20.01.2020 |
| 3. | இவ்வழக்கு கோப்பினை அமர்வு | இல்லை |

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.30 17:51:44 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | நீதிமன்றத்திற்கு மேல்விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | | | |
| 4. | குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் கு.வி.மு.ச பிரிவு 240–ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்டு குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 30.12.2024 | | |
| 5. | குற்றவியல் பல்வகை மனு தாக்கல் செய்த விவரமும் அதன் முடிவும் (கு.வி.மு.ச.பிரிவு 317 மனு தவிர) | குற்றம்சாட்டப்பட்டவர்களின் முன் பிணை மனு: சிஆர்.எம்.பி. எண்:34/2017 நாள்:12.01.2017 அனுமதிக்கப்பட்டது. 311 சிஆர்.பி.சி. மனு: சிஆர்.எம்.பி. எண்:10/2026 நாள்:17.06.2026 அனுமதிக்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவரின் 359 பாகுமச –வின் கீழான மனு: சிஆர்.எம்.பி.எண்:10 /2026 நாள்:27.05.2023 தள்ளுபடி செய்யப்பட்டது. | | |
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அரசு தரப்பு சாட்சிகள் | முதல் விசாரணை செய்த நாள் | குறுக்கு விசாரணை செய்த நாள் |
| | | அ.சா.1 | 27.05.2026 | இல்லை |
| | | அ.சா.2 | 27.05.2026 | இல்லை |
| | | அ.சா.3 | 27.05.2026 | இல்லை |
| | | அ.சா.4 | 27.05.2026 | இல்லை |
| | | அ.சா.5 | 27.05.2026 | இல்லை |
| | | அ.சா.6 | 27.05.2026 | இல்லை |
| | | அ.சா.7 | 17.06.2026 | 17.06.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ) ன் படி குற்றம்சாட்டப் பட்டவர்களிடம் வினாக்கள் வினவப்பட்ட நாள் | 29.06.2026 | | |

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.30 17:51:50 +0530

| | | |
|---|---|---|
| 8. | குற்றம்சாட்டப்பட்டவர் தலைமறைவான விவரம் மற்றும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரான விவரம் மற்றும் ஆஜர்படுத்தப்பட்ட விவரம் | இல்லை |
| 9. | மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தடை உத்தரவு குறித்த விவரம் | இல்லை |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்:80/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 29.06.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பழ.துரைவேலவன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களை பார்வையிட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## <u>தீர்ப்புரை</u>

1. எஸ்.எஸ்.கோட்டை காவல்நிலைய ஆய்வாளர் எதிரிகள் மீது இதச பிரிவு 420 ன் கீழ் குற்றம் புரிந்ததாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

2(1).இவ்வழக்கில் கடந்த 02.12.2016 ம் தேதி மதியம் சுமார் 14.00 மணிக்கு எருமைப்பட்டியில் வசித்து வரும் நிகழ்நிலை புகார்தாரர் ரமேஷ் என்பவர் வீட்டில் 1 வது எதிரி கேஷ் அடுப்பு ஒன்று வாங்கினால் 2 சிலிண்டர் இலவசமாக தருவதாக சொல்லவும், நிகழ்நிலை புகார்தாரர் அதை கேட்டு அவர் சொன்னபணம் ரூ.3500/- கொடுத்து அடுப்பை வாங்கியுள்ளார் என்றும் அலுவலகம் எங்குள்ளது என்று கேட்டதற்கு மேலூரில் நாகம்மாள் கோயில் அருகில் அலுவலகம் உள்ளதாக கூறியுள்ளார் என்றும் நிகழ்நிலை புகார்தாரரும்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.30 17:51:56 +0530

சொன்னதன் பேரில் மேலூர் சென்று பார்த்த போது அப்படி அலுவலகம் எதுவும் இல்லை என்று அக்கம் பக்கம் உள்ளவர்கள் சொல்லியுள்ளார்கள் என்றும் மேலும் இது சம்பந்தமாக நிகழ்நிலை புகார்தாரா மல்லாக்கோட்டை கிராமங்களில் விசாரித்த போது (1)செல்வம் மனைவி கவிதா (2)சொக்கன் மனைவி அமுதா (3)லெட்சுமணண் மனைவி லெட்சுமி (4)மாணிக்கம் மனைவி மூக்காயி (5)குமார் மனைவி மாயாதேவி ஆகியோர்கள் எதிரிகள் ஆசை வார்த்தை கூறவும் ஒரு கேஸ் அடுப்புக்கு ரூ.3500/- வீதம் வாங்கி கொண்டு ஏமாற்றிய குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது இதச பிரிவு 420ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. புலன்விசாரணை அதிகாரி தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையை கோப்பிற்கு எடுத்த இந்த நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவர்களின் குற்றச்செயல் குறித்து அடிப்படை முகாந்திரம் இருப்பதாக கருதியதால் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியது. அழைப்பாணையின் பேரில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகினர். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

4.குற்றம்சாட்டப்பட்டவருக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் குற்றம் குறித்து வினவிய போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை மறுத்தனர். இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. குற்றம்சாட்டப்பட்டவர்களின்ன் கருத்தும் கேட்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு குறித்து அடிப்படை முகாந்திரம் இருந்த காரணத்தால் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவு 420ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூறி வினவப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்கள் தங்கள் மீதான குற்றத்தை மறுத்தனர். எனவே, அரசு தரப்புச் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.30 17:52:03 +0530

5.அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. மேலும் அ.த.சா.பொ.1 சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6.<u>அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியம் மற்றும் ஆவணங்களிலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு :–</u>

6(1). அ.சா.1 ரமேஷ் புகார்தாரர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு அடையாளம் தெரியாத சில நபர்கள் கேஸ் அடுப்பு ஒன்று வாங்கினால் இரண்டு சிலிண்டர் இலவசம் என கூறி தன்னை ஏமாற்றி ரூ.3500/– தனது வீட்டிற்கு வந்து பெற்று சென்றனர் என்றும் பின்னர் அவர்களை தொடர்பு கொள்ள இயலவில்லை என்றும் பின்னர் விசாரித்த போது இதே போல் மல்லாக்கோட்டையில் உள்ள கவிதா, அமுதா, லெட்சுமி, மூக்காயி, மாயாதேவி ஆகியோர்களிடமும் பணம் பெற்றதாக தெரிந்து கொண்டேன் என்றும் எனவே நடந்த சம்பவம் குறித்து காவல் நிலையம் சென்று அ.த.சா.ஆ–1 புகார்மனு கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்

6(2) அ.சா.2 முதல் அ.சா.6 சம்பவம் குறித்து சாட்சியம் அளித்துள்ளனர். இவர்கள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் தங்களை ஏமாற்றி கேஸ் அடுப்பு வாங்கினால் 2 சிலிண்டர் இலவசம் என்று கூறியதை நம்பி ரூ.3500/– கொடுத்து கேஸ் அடுப்பு வாங்கிய குற்ற நிகழ்வினை குறித்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர்.

6(3) அ.சா.7 சசிக்குமார் காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் கடந்த 03.12.2016ம் தேதி 15.00 மணிக்கு காவல் ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது ஆறுமுகம் மகன் ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.த.சா.ஆ–2 புகார்மனுவை பெற்று பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்:66/2016 இதச பிரிவு 420ன் கீழ்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.30 17:52:09 +0530

அ.த.சா.ஆ–3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் சாட்சிகள் 1 முதல் 6, 9 வரையான சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் 03.12.2016 ம் தேதி மாலை 18.00 மணிக்கு மல்லாக்கோட்டை பஸ் நிலையத்தில் வைத்து வழக்கின் எதிரி கண்ணன் என்பவரை கைது செய்து, எதிரி எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்துதலோ இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஆறுமுகம், மாணிக்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்து, பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் அ.த.சா.பொ.1 ஆக கைப்பற்றப்பட்ட கேஸ் அடுப்பு இரண்டை அ.த.சா.ஆ–4 படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, பின்னர் சாட்சிகள் ஆறுமுகம் மற்றும் மாணிக்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7.அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தபட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் விளக்கிக் கூறி கு.வி.மு.ச. பிரிவு 313 (1)(b)–ன் கீழ் வினவிய போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் அவை அனைத்தும் பொய்யென்றும் அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்று மறுத்தனர். குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

8.பின்னிட்டு இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன.

9.அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது இவ்வழக்கில் அ.சா.1 புகார்தாரர் என்றும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.6ம், எதிரிகளும் சமாதானமாக சென்று விட்டதால் மேல் நடவடிக்கை வேண்டாம் என்றும் அதன் காரணமாகவே அவர் பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர் என்றும் ஆனால் காவல்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.30 17:52:15 +0530

ஆய்வாளரின் சாட்சியத்தின் மூலம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்று வாதிட்டார்.

10.எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றும் இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1ம் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.2 முதல் அ.சா.6 வரையனாவர்களும் எதிரிகளுக்கு எதிராக ஒரு வார்த்தையும் பேசவில்லை என்றும் மேலும் அவர் பிறழ்சாட்சியாக மாறியுள்ளனர் என்பதால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் எடுத்துரைத்தார்.

**11.<u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u>:–**

(அ). குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவு 420ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதா?

(ஆ).ஆம் எனில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய தண்டனை என்ன என்பதேயாகும்.

**12.<u>பரிசீலனையும் தீர்வும்</u>:–**

12(1) இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கானது கடந்த 02.12.2016ம் தேதி மதியம் சுமார் 14.00 மணிக்கு எருமைப்பட்டியில் வசித்து வரும் நிகழ்நிலை புகார்தாரர் ரமேஷ் என்பவர் வீட்டில் 1வது எதிரி கேஷ் அடுப்பு ஒன்று வாங்கினால் 2 சிலிண்டர் இலவசமாக தருவதாக சொல்லவும், நிகழ்நிலை புகார்தாரர் அதை கேட்டு அவர் சொன்னபணம் ரூ.3500/– கொடுத்து அடுப்பை வாங்கியுள்ளார் என்றும் அலுவலகம் எங்குள்ளது என்று கேட்டதற்கு மேலூரில் நாகம்மாள் கோயில் அருகில் அலுவலகம் உள்ளதாக கூறியுள்ளார் என்றும் நிகழ்நிலை புகார்தாரரும் சொன்னதன் பேரில் மேலூர் சென்று பார்த்த போது அப்படி அலுவலகம் எதுவும் இல்லை என்று அக்கம் பக்கம் உள்ளவர்கள்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.30 17:52:21 +0530

சொல்லியுள்ளார்கள் என்றும் மேலும் இது சம்பந்தமாக நிகழ்நிலை புகார்தாரா மல்லாக்கோட்டை கிராமங்களில் விசாரித்த போது (1)செல்வம் மனைவி கவிதா (2)சொக்கன் மனைவி அமுதா (3)லெட்சுமணண் மனைவி லெட்சுமி (4)மாணிக்கம் மனைவி மூக்காயி (5)குமார் மனைவி மாயாதேவி ஆகியோர்களிடம் எதிரிகள் ஆசை வார்த்தை கூறவும் ஒரு கேஸ் அடுப்புக்கு ரூ.3500/- வீதம் வாங்கி கொண்டு ஏமாற்றிய குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12(2). இவ்வழக்கில் அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு அடையாளம் தெரியாத சில நபர்கள் கேஸ் அடுப்பு ஒன்று வாங்கினால் இரண்டு சிலிண்டர் இலவசம் என கூறி தன்னை ஏமாற்றி ரூ.3500/- தனது வீட்டிற்கு வந்து பெற்று சென்றனர் என்றும் பின்னர் அவர்களை தொடர்பு கொள்ள இயலவில்லை என்றும் பின்னர் விசாரித்த போது இதே போல் மல்லாக்கோட்டையில் உள்ள கவிதா, அமுதா, லெட்சுமி, மூக்காயி, மாயாதேவி ஆகியோர்களிடமும் பணம் பெற்றதாக தெரிந்து கொண்டேன் என்றும் எனவே நடந்த சம்பவம் குறித்து காவல் நிலையம் சென்று அ.த.சா.ஆ-1 புகார்மனு கொடுத்ததாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

12(3). சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.6 வரையானவர்கள் தங்களது சாட்சியத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு அடையாளம் தெரியாத சில நபர்கள் கேஸ் அடுப்பு ஒன்று வாங்கினால் இரண்டு சிலிண்டர் இலவசம் என கூறி தங்களை ஏமாற்றி ரூ.3500/- தங்களது வீட்டிற்கு வந்து பெற்று சென்றனர் என்றும் பின்னர் அவர்களை தொடர்பு கொள்ள இயலவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12(4). சம்பவத்தில் பாதிக்கப்பட்ட, புகார்தாரரான அ.சா.1ம், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.2 முதல் அ.சா.6 வரையானவர்கள் தங்களது சாட்சியத்தில் 1 முதல் 4 எதிரிகள் ஒரு கேஸ் அடுப்பு வாங்கினால் 2 சிலிண்டர்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.30 17:52:27 +0530

இலவசம் என்று ஆசை வார்த்தை கூறி ரூ.3500/– கொடுத்து கேஸ் அடுப்பினை வாங்க வைத்து ஏமாற்றிய குற்றம் புரிந்துள்ளனர் என எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

12(5). அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகளை அடையாளப்படுத்தி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் அ.த.சா.ஆ–4 ஆன படிவம் 91ல் 03.12.2016ம் தேதி காலம் 4ல் யாரிடமிருந்து வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டு கூறவில்லை. மேலும் அத்தாட்சி மகஜர் ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அரசு தரப்பு வழக்கை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை.

12(6). இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் அத்தாட்சி மகஜர் ஆகியவற்றை தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது. மேலும் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகளிடம் எதிரிகள் கேஸ் அடுப்பு விற்பனை செய்ததாக அரசு தரப்பு வழக்கு நிலையில் இவ்வழக்கில் இரண்டு கேஸ் அடுப்புகள் மட்டும் சான்று பொருளாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி மற்ற கேஸ் அடுப்புகளை கைப்பற்றி தாக்கல் செய்யாதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(7). அ.சா.1 முதல் அசா.6 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் அடையாளம் தெரியாத சில நபர்கள் தங்களிடம் கேஸ் அடுப்பு விற்பனை செய்து ஏமாற்றியதாக சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகளை அடையாளப்படுத்தி எவ்வித சாட்சியமும் அளிக்காதது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாக உள்ளது.

12(8). சம்பவத்தில் பாதிக்கப்பட்ட புகார்தாரரான அ.சா.1ம், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.2 முதல் அ.சா.6 வரையானவர்கள் அரசு

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.30 17:52:34 +0530

தரப்பிற்கு ஆதரவாக சம்பவம் குறித்தும், குற்றம்சாட்டப்பட்டவர்களின் குற்றச்செயல் குறித்தும் ஒரு வார்த்தையும் பேசாத நிலையில், எஞ்சிய சாட்சிகளை விசாரிப்பதில் எவ்வித பயனில்லை என்று முடிவு செய்யப்பட்டு அரசு தரப்பில் சாட்சிகள் நீக்கரவு செய்யப்பட்டனர். மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பதையும், அதற்கான அத்தாட்சி மகஜரையும் தாக்கல் செய்யாத நிலையிலும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.1 முதல் அசா.6 வரையானவர்கள் எதிரிகளை அடையாளப்படுத்தி எவ்வித சாட்சியமும் அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். காவல் ஆய்வாளர் திரு.சசிக்குமார் அ.சா.7 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். காவல் ஆய்வாளர் அ.சா.7 ன் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் எதிரிகள் குற்றச்செயல் புரிந்தனரா என்று தீர்மானிக்க இயலாது. மேலும் அ.சா.7 காவல் ஆய்வாளர் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். புகார்தாரரான அ.சா.1 ம், பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.2 முதல் அ.சா.6 வரையானவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது, குற்றம்சாட்டப்பட்டவர்களின் குற்றச்செயல் குறித்து ஒரு வார்த்தையும் பேசாத நிலையில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை அரசு தரப்பு நிரூபணம் செய்ததாக கருத இயலவில்லை.

12(9).இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 ம், பாதிக்கப்பட்ட நபர்களான அ.சா.2 முதல் அ.சா.6 வரையானவர்களும் குற்றம்சாட்டப்பட்டவர்களும் சமாதானமாக சென்றுவிட்ட நிலையிலும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் நிகழ்நிலை புகார்தாரரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களை ஒரு கேஸ் அடுப்பு வாங்கினால் இரண்டு சிலிண்டர் இலவசம் என ஏமாற்றி தலா ரூ.3500/- பெற்று சென்றதாக அரசு தரப்பிற்கு ஆதரவாக ஒரு வார்த்தையும் பேசாத நிலையில் இவ்வழக்கின் நடவடிக்கைகளை தொடர்வது நீதிமன்றத்தின் நேரத்தினை வீணடிக்கும் செயல் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வழக்கினை தொடர்வது எந்த

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.06.30 17:52:40 +0530

தரப்பினருக்கும் பயனளிக்க கூடியது அல்லவென்றும், இந்நீதிமன்றத்தின் செயல்முறை மாண்பினை குறைக்கும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மாண்புமிகு உச்சநீதிமன்றமும் Central Bureau of Investigation Vs Sadhu Ram Singh reported in 2017(1) MLJ Crl 724 SC என்ற வழக்கில் continuance of criminal proceedings after compromise has been arrived between complainant and accused would amount to abuse of process of court and exercise in futility- Trial would be prolonged and it may end in decision which may be of no consequence to any parties-Appeal dismissed என்று சொல்லியுள்ளது. இந்த முன் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினரும் சமாதானமாக சென்றுவிட்ட நிலையில் வழக்கினை தொடர்வது அனாவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக,**

13. குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டதென முடிவு செய்து குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவு 420ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து குற்றம்சாட்டப்பட்டவர்களை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

14. இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் பி.ஆர்.எண்:62/2018 ஆக தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் பி.ஆர்.எண்:142/2020 ஆக மாற்றம் செய்யப்பட்டு அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள SURYA KRYSTAL Plus, 3 Burnor cask Top Gas Stove 2 எண்ணத்தை சொத்தின் உரிமையாளர் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மனு செய்து பெற்று செல்லவும், தவறும்பட்சத்தில் வழக்கு சொத்து அரசுடமையாக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுன் மாதம் 30-ம் நாள் என்னால்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.30 17:52:46 +0530

அவையறியப் பகரப்பட்டது.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.30 17:52:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | ரமேஷ் / புகார்தாரர் |
| அ.சா.2 | கவிதா / பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.3 | லெட்சுமி / பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.4 | அமுதா / பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.5 | மூக்காயி / பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.6 | மாயாதேவி / பாதிக்கப்பட்ட நபர் |
| அ.சா.7 | சசிக்குமார் / காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 27.05.2026 | அ.சா.1 | புகார்மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.2 27.05.2026 | அ.சா.2 | சமரசமனு |
| அ.த.சா.ஆ.3 17.06.2026 | அ.சா.7 | புகார்மனு |
| அ.த.சா.ஆ.4 17.06.2026 | அ.சா.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 17.06.2026 | அ.சா.3 | படிவம் 91 |

**அரசு தரப்பு சான்றுபொருள்:-**

| | | |
|---|---|---|
| அ.த.சா.பொ.1 17.06.2026 | அ.சா.7 | SURYA KRYSTAL Plus, 3 Burnor cask Top Gas Stove 2 எண்ணம் |

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணம், சான்றுபொருள் :-** இல்லை

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.30 17:52:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.

**குறிப்பு:–**

1. எந்த ஒரு சாட்சியும் விசாரணைக்கு 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கின் விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

/ உண்மை நகல் /

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.06.30 17:53:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.